# <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>புதிய மின் இணைப்பு வழங்க ரூ.7,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய வணிக ஆய்வாளர் கைது</u>

புகார்தாரர் திரு.முனிகிருஷ்ணா, தோட்டிக்குப்பம், இருதுகோட்டை கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய விவசாய நிலத்தில் போடப்பட்ட போர்வெல்லுக்கு புதிய மின் இணைப்பு கேட்டு தேன்கனிக்கோட்டை தெற்கு உதவி பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.தனபால், வணிக ஆய்வாளர், அவர்கள் தனக்கு ரூ.7,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கிருஷ்ணகிரி மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் 23.04.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.தனபால், வணிக ஆய்வாளர், லஞ்ச பணம் ரூ.7,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.